www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

V11Acc

விருதுநகர் மாவட்டம்

முதல் திருப்புதல் பொதுத் தேர்வு - ஜனவரி 2025

வகுப்பு 11

கால அளவு : 3 மணிநேரம் **கணக்குப்பதிவியல்** மதிப்பெண்கள் : 90

பகுதி-I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்: 20×1=20

1) வங்கி அறிக்கை என்பது
   a) ரொக்க ஏட்டின் ரொக்கப் பத்தியின் நகல்
   b) ரொக்க ஏட்டின் வங்கிப் பத்தியின் நகல்
   c) வங்கிப் புத்தகத்தில் வாடிக்கையாளர் கணக்கின் நகல்
   d) வணிகத்தால் விடுக்கப்பட்ட காசோலையின் நகல்

2) தள்ளுபடி, ரொக்கம் மற்றும் வங்கி பத்திகளுடைய ரொக்க ஏட்டை இவ்வாறு அழைக்கலாம்
   a) சாதாரண ரொக்க ஏடு b) இருபத்தி ரொக்க ஏடு
   c) முப்பத்தி ரொக்க ஏடு d) சில்லறை ரொக்க ஏடு

3) இறுதிப்பதிவுகள் பதிவு செய்யுமிடம்
   a) ரொக்க ஏடு b) பேரேடு
   c) உரிய குறிப்பேடு d) கொள்முதல் ஏடு

4) கீழ்க்கண்டவற்றில் எது / எவை இருப்பாய்வு தயாரிப்பதன் நோக்கங்களாகும்
   a) அனைத்து பேரேட்டுக் கணக்குகளின் சுருக்கத்தைத் தருவது
   b) இறுதிக் கணக்குகளைத் தயாரிக்க உதவுவது
   c) கணக்குகளின் கணக்கீட்டுச் சரித்தன்மையைப் பரிசோதிப்பது
   d) (அ), (ஆ) மற்றும் (இ)

5) கு.ப.எ. என்பது
   a) பேரேட்டு பக்க எண் b) குறிப்பேட்டு பக்க எண்
   c) சான்றுசீட்டு எண் d) ஆணை எண்

6) கணக்கியல் சமன்பாட்டின்படி சரியாக இல்லாதது
   a) சொத்துக்கள் = பொறுப்புகள் + முதல் b) சொத்துக்கள் = முதல் + பொறுப்புகள்
   c) பொறுப்புகள் = சொத்துக்கள் + முதல் d) முதல் = சொத்துக்கள் – பொறுப்புகள்

7) இந்தியாவில் கணக்கியல் தரநிலைகளை வழங்கும் அமைப்பு
   a) இந்திய மைய வங்கி
   b) இந்திய அடக்கவிலை மற்றும் கணக்காளர் நிறுவனம்
   c) உச்ச நீதிமன்றம்
   d) இந்தியப் பட்டயக் கணக்காளர் நிறுவனம்

8) ஒரு வணிகத்தின் நிதிநிலையை அறிந்து கொள்ள அடிப்படையானது
   a) குறிப்பேடு b) இருப்பாய்வு
   c) இருப்புநிலைக் குறிப்பு d) பேரேடு

9) நிதிநிலைக் கணக்கின் அடிப்படையாக விளங்குவது
   a) சமூகக் கணக்கியல் b) பொறுப்பு கணக்கியல்
   c) காரியதரிசிகளின் கணக்கியல் d) மேலாண்மைக் கணக்கியல்

10) இறுதி சரக்கிருப்பு, அடக்க விலை அல்லது விற்று ஈட்டக் கூடிய மதிப்பு இதில் எது குறைவோ அதனடிப்படையில் மதிப்பிடப்படும் என்ற கணக்கியல் கோட்பாடு
   a) முக்கியத்துவ மரபு b) பணமதிப்பீட்டுக் கருத்து
   c) முன்னெச்சரிக்கை மரபு d) நிகழ்வு தீர்வு / கருத்து

11) ஒரு தொழிலின் பொறுப்புகளின் மதிப்பு ₹30,000, முதல் ₹70,000 எனில் சொத்துக்களின் மதிப்பு
   a) ₹70,000 b) ₹1,00,000 c) ₹30,000 d) ₹40,000

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com


12) பின்வருவனவற்றில் பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு எது?
a) கட்டடம் கணக்கு b) மகேஷ் கணக்கு
c) கொடுபட வேண்டிய சம்பள கணக்கு d) பாலன் நிறுவனம்

13) பேரேட்டுக் கணக்குகள் தயாரிப்பதன் முக்கிய நோக்கம்
a) நிதி நிலைமையை அறிய
b) இலாபம் அல்லது நட்டத்தை அறிய
c) நிதிநிலைமை மற்றும் இலாபநட்டத்தை அறிய
d) ஒவ்வொரு பேரேட்டுக் கணக்கின் இருப்பை அறிய

14) இருப்பாய்வு தயாரிக்கும் போது கணக்காளர் இருப்பாய்வின் வரவு பக்கத்தில் மொத்த தொகை ₹200 குறைவாக இருப்பதைக் கண்டறிந்தார். அந்த வேறுபாட்டினை அவர் என்ன செய்வார்?
a) அனாமத்து கணக்கில் பற்று செய்வார்
b) அனாமத்து கணக்கில் வரவு செய்வார்
c) ஏதேனும் பற்று இருப்புக் கொண்ட கணக்கில் சரி செய்வார்
d) ஏதேனும் வரவு இருப்புக் கொண்ட கணக்கில் சரி செய்வார்

15) எந்தச் செலவிற்கு சில்லறை ரொக்கத்திலிருந்து கொடுக்கலாம்?
a) தபால் செலவு மற்றும் பயணச் செலவுகள்
b) மேலாளரின் ஊதியம்
c) அறைகலன் மற்றும் பொருத்துகைகள் வாங்க
d) மூலப் பொருட்கள் வாங்க

16) பின்வரும் வாக்கியங்களில் எது உண்மையல்ல?
a) ரொக்க தள்ளுபடி கணக்கேடுகளில் பதிவு செய்யப்படுகிறது
b) சொத்துக்கள் கடனுக்கு வாங்கியது உரிய குறிப்பேட்டில் பதிவு செய்யப்படுகிறது
c) வியாபாரத் தள்ளுபடி கணக்கேடுகளில் பதிவு செய்யப்படுகிறது
d) மாற்றுச்சீட்டின் செலுத்தற்குரிய நாளை கணக்கிடும் போது மூன்று நாட்கள் சலுகை நாட்களாகக் கூட்டப்படுகின்றன

17) வங்கி அறிக்கையின்படி இருப்பு ₹1,000. செலுத்திய காசோலை வங்கியால் இன்னும் வரவு வைக்கப்படாதது ₹2,000. ரொக்க ஏட்டில் வங்கிப் பத்தியின் இருப்பு எவ்வளவு?
a) ₹3,000 மேல்வரைப்பற்று b) ₹3,000 சாதகமான இருப்பு
c) ₹1,000 மேல்வரைப்பற்று d) ₹1,000 சாதகமான இருப்பு

18) சாதாரண ரொக்க ஏட்டை வைத்திருக்கும் ஒரு நிறுவனம் எந்த கணக்கை தயாரிக்க தேவை இல்லை?
a) பேரேட்டில் விற்பனைக் கணக்கு b) பேரேட்டில் கொள்முதல் கணக்கு
c) பேரேட்டில் முதல் கணக்கு d) பேரேட்டில் ரொக்கக் கணக்கு

19) நாம் வழங்கிய காசோலை அவமதிக்கப்பட்டால் வரவு செய்யப்படும் கணக்கு
a) சரக்கீந்தோர் கணக்கு b) வாடிக்கையாளர் கணக்கு
c) வங்கி கணக்கு d) ரொக்க கணக்கு

20) மேலாளருக்கு செலுத்திய ஊதியம் பற்று வைக்க வேண்டியது
a) மேலாளர் கணக்கு b) அலுவலக செலவு கணக்கு
c) ஊதிய கணக்கு d) ரொக்க கணக்கு

## பகுதி-II

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்.** **7×2=14**
**வினா எண்.30 க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

21) கணக்கியல் செயல்பாட்டிலுள்ள படிநிலைகள் யாவை?
22) கணக்கியல் கருத்துக்கள் என்றால் என்ன?
23) ஏதேனும் நான்கு துணை ஏடுகளின் வகைகளை கூறுக.
24) ஆதார ஆவணம் என்றால் என்ன?
25) இருப்பாய்வு தயாரிக்கும் முறைகள் யாவை?
26) பின்வரும் விவரங்களிலிருந்து 2016 டிசம்பர் 31-ம் நாளுக்குரிய வங்கி சரிகட்டும் பட்டியலை தயார் செய்க.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



(i) ரொக்க ஏட்டின்படி இருப்பு ₹ 300

(ii) வங்கியில் வைப்பு செய்த காசோலை வசூலித்து வரவு வைக்கப்படாதது ₹ 500

(iii) விடுத்த காசோலை செலுத்துகைக்கு இதுவரை முன்னிலைப்படுத்தப்படாதது ₹ 1,000

27) பின்வருவனவற்றை ஆள்சார் கணக்கு, சொத்து கணக்கு மற்றும் பெயரளவு கணக்கு என்று வகைப்படுத்துக.

a) நற்பெயர் b) கொடுபட வேண்டிய கூலி

c) பதிப்புரிமை d) வட்டி பெற்றது

28) கொள்முதல் ஏடு தயாரிக்கவும்:

2023

மார்ச் 1 அரவிந்திடம் சரக்கு வாங்கியது ₹ 24,000

மார்ச் 4 நேகாவிடம் சரக்கு வாங்கியது ₹ 10,000

மார்ச் 11 அனுவிடம் சரக்கு வாங்கியது ₹ 22,000

மார்ச் 17 குமாரிடம் சரக்கு வாங்கியது ₹ 8,000

29) பின்வரும் குறிப்பேட்டுப் பதிவுகளுக்கான விளக்கக்குறிப்பு தருக.

| | விவரம் | | பற்று | வரவு |
|---|---|---|---|---|
| (i) | வங்கி க/கு | ப | 10,000 | |
| | வங்கிக்கடன் க/கு | | | 10,000 |
| (ii) | எடுப்புகள் க/கு | ப | 2,000 | |
| | கொள்முதல் க/கு | | | 2,000 |

30) கூட்டுப்பதிவு என்றால் என்ன?

## பகுதி-III

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்.** **7×3=21**

**வினா எண்.40 க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

31) 'ஒரு வணிக நிறுவனம் தொடர்ச்சியாக நடைபெற வேண்டும்' - இந்த வாக்கியத்தை அடிப்படையாகக் கொண்ட கணக்கியல் கருத்தை விளக்குக.

32) இருப்பாய்வு தயாரிப்பதன் நோக்கங்கள் யாவை?

33) எதிர்ப்பதிவை உதாரணத்துடன் விளக்குக.

34) பின்வரும் இருப்புக்களைக் கொண்டு இருப்பாய்வு தயாரிக்கவும்.

| | ₹ |
|---|---|
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 1,00,000 |
| சரக்கிருப்பு | 70,000 |
| முதல் | 2,50,000 |
| கொள்முதல் | 1,80,000 |
| விற்பனை | 3,00,000 |
| கடனாளிகள் | 4,00,000 |

35) திருமதி லதாவின் தனிப்பத்தி ரொக்க ஏட்டினை தயாரிக்கவும்.

| | | ₹ |
|---|---|---|
| 2021 செப்டம்பர் 1 | கையிருப்பு ரொக்கம் | 20,000 |
| செப்டம்பர் 4 | ரொக்க கொள்முதல் | 4,000 |
| செப்டம்பர் 7 | ரொக்க விற்பனை | 8,000 |
| செப்டம்பர் 18 | பாலனுக்கு செலுத்தியது | 5,000 |
| செப்டம்பர் 20 | வாடகை செலுத்தியது | 1,000 |
| செப்டம்பர் 25 | பங்காதாயம் பெற்றது | 500 |

36) கணக்கியலின் பொன்னான விதிகள் யாவை?

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



37) கீழ்க்கண்ட நடவடிக்கைகளை பாகுபடுத்தப்பட்ட சில்லறை ரொக்க ஏட்டில் பதிவு செய்க

2017

| | | |
|---|---|---|
| ஜன 1 | சில்லறை செலவுக்காக ரொக்கம் பெற்றது | ₹ 400 |
| 4 | அஞ்சல் தலைகள் வாங்கியது | ₹ 40 |
| 8 | பயணச் செலவுகள் செய்தது | ₹ 50 |
| 10 | எழுதுபொருள் வாங்கியது | ₹ 60 |
| 12 | ரவிக்கு கொடுத்தது | ₹ 70 |
| 15 | பேருந்து கட்டணம் செலுத்தியது | ₹ 80 |

38) சிறு குறிப்பு வரைக

(a) மாற்றுச்சீட்டில் மேலெழுதுதல்

(b) மாற்றுச்சீட்டை தள்ளுபடி செய்தல்

39) கீழ்க்கண்ட விவரங்களைக் கொண்டு தொடக்கப் பதிவினை பதிவு செய்க.

**சொத்துக்கள் :** ரொக்கம் ₹ 45,000
சரக்கிருப்பு ₹ 50,000
மோகனிடம் பெற வேண்டியது ₹ 35,000
அறைகலன் ₹ 50,000

**பொறுப்புகள் :** கடனீந்தோர் ₹ 20,000

40) பின்வருனவற்றிக்கான ஏதேனும் ஒரு நடவடிக்கையைத் தருக.

(a) முதல் அதிகரிக்கும் போது சொத்து அதிகரித்தல்

(b) பொறுப்புக்கள் குறையும் போது, சொத்துக்களும் குறைதல்

(c) ஒரு பொறுப்பு குறையும் போது, இன்னொரு பொறுப்பு அதிகரித்தல்

## பகுதி-IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:** **7×5=35**

41) a) பின்வரும் நடவடிக்கைகளை குறிப்பேட்டில் பதிவு செய்க.

| | | ₹ |
|---|---|---|
| ஜன 1 | ரொக்கத்துடன் வியாபாரம் தொடங்கியது | 2,00,000 |
| ஜன 2 | வங்கியில் பணம் செலுத்தியது | 1,00,000 |
| ஜன 3 | ரவியிடம் சரக்குகள் கொள்முதல் செய்யப்பட்டு இணைய வங்கி மூலம் செலுத்தப்பட்டது | 90,000 |
| ஜன 5 | விவேக்கிற்கு விற்பனைச் செய்ததற்கான தொகையினை அவர் எடுப்பு அட்டை மூலம் செலுத்துகிறார் | 60,000 |
| ஜன 7 | பங்காதாயம் நேரடியாக வங்கியால் பெறப்பட்டது | 2,000 |

**(அல்லது)**

b) பின்வரும் நடவடிக்கைகளிலிருந்து 2018 ஜனவரி மாதத்திற்கான ரொக்க கணக்கைத் தயாரிக்கவும்:

| | | ₹ |
|---|---|---|
| ஜன 1 | ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது | 62,000 |
| 3 | ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது | 12,000 |
| 10 | ரொக்கத்திற்கு சரக்கு விற்றது | 10,000 |
| 12 | கூலி ரொக்கமாக செலுத்தியது | 4,000 |
| 25 | அறைகலன் ரொக்கத்திற்கு வாங்கியது | 6,000 |

42) a) பின்வரும் இருப்புக்களைக் கொண்டு இருப்பாய்வு தயாரிக்கவும்:

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| கை ரொக்கம் | 5,500 | நேரடிச் செலவுகள் | 5,000 |
| பெற்ற தள்ளுபடி | 300 | வெளித்தூக்கு கூலி | 3,500 |
| கடனீந்தோர் | 15,000 | முதல் | 45,000 |
| கட்டடம் | 50,000 | கொள்முதல் | 49,700 |
| தொடக்கச் சரக்கிருப்பு | 6,000 | விற்பனை | 59,400 |

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

(அல்லது)

b) கீழ்க்காணும் விவரங்களிலிருந்து டிசம்பர் 31, 2017-ம் நாளுக்குரிய வங்கிச் சரிகட்டும் பட்டியல் தயார் செய்க.

| விவரம் | | ₹ |
|---|---|---|
| (i) | ரொக்க ஏட்டின்படி மேல் வரைப்பற்று | 10,000 |
| (ii) | செலுத்திய காசோலை இன்னும் வரவு வைக்கப்படாதது | 5,000 |
| (iii) | விடுத்த காசோலை இன்னும் செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தப்படாதது | 1,000 |
| (iv) | வங்கி வாடிக்கையாளரிடமிருந்து நேரடியாகப் பெற்றது | 500 |
| (v) | வங்கி பற்றுவைத்த மேல்வரைப்பற்று மீதான வட்டி | 1,000 |
| (vi) | வங்கியால் தவறுதலாக பற்று வைக்கப்பட்ட தொகை | 300 |

43) a) ஆனந்த் என்பவரின் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை ரொக்கம் மற்றும் தள்ளுபடி பத்திகளுடைய ரொக்க ஏட்டில் பதிவு செய்யவும்.

| 2017 | | ₹ |
|---|---|---|
| டிச. 1 | கைவச ரொக்கம் | 19,500 |
| 4 | ரொக்கத்திற்கு சரக்கு விற்றது | 32,000 |
| 5 | காந்தியிடம் கடனுக்கு கொள்முதல் செய்தது | 20,000 |
| 9 | கோபுவிடம் பெற்றது | 11,800 |
| | அவருக்கு அளித்த தள்ளுபடி | 200 |
| 15 | மின்கட்டணம் ரொக்கமாகச் செலுத்தியது | 12,500 |
| 17 | ரொக்கம் செலுத்தி கணிப்பொறி மற்றும் அதன் இதர பாகங்களை வாங்கியது | 16,800 |
| 25 | காந்திக்கு ₹ 19,700 செலுத்தி அவர் கணக்கு முழுவதையும் தீர்த்துக் கொண்டது | |
| 28 | திருவேங்கடத்திடம் ரொக்கம் பெற்றது | 8,900 |
| | அவருக்கு அளித்த தள்ளுபடி | 100 |
| 30 | வியாபார செலவுகளை ரொக்கமாகச் செலுத்தியது | 3,500 |

(அல்லது)

b) ரொக்கத் தள்ளுபடிக்கும் வியாபாரத் தள்ளுபடிக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக. (ஏதேனும் 5)

44) a) பின்வரும் நடவடிக்கைகளைக் கொண்டு ஏப்ரல் மாதத்திற்கான சந்தோஷ் ஆடையகத்தின் கொள்முதல் ஏடு மற்றும் விற்பனை ஏடு தயார் செய்க:

| 2017 | |
|---|---|
| ஏப்ரல் 1 | காஞ்சிபுரம் பிரசாத்திடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது |
| | ஒரு மீட்டர் ₹ 450 வீதம் 100 மீட்டர் சில்க் துணி |
| | ஒரு மீட்டர் ₹ 180 வீதம் 75 மீட்டர் வெல்வெட் துணி |
| ஏப்ரல் 10 | சென்னை இரத்தினத்திற்கு கடனுக்கு சரக்கு விற்றது |
| | ஒரு மீட்டர் ₹ 490 வீதம் 60 மீட்டர் சில்க் துணி |
| | ஒரு மீட்டர் ₹ 210 வீதம் 50 மீட்டர் வெல்வெட் துணி |
| ஏப்ரல் 18 | நாதன் நிறுவனம் நம்மிடமிருந்து கடனுக்கு வாங்கியது |
| | ஒரு மீட்டர் ₹ 510 வீதம் 100 மீட்டர் சில்க் துணி |
| ஏப்ரல் 20 | மதுரை, ராம் துணியகத்திடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது |
| | கட்டு ஒன்று ₹ 730 வீதம் 50 கட்டுகள் காடாத்துணி |
| | கட்டு ஒன்று ₹ 650 வீதம் 80 கட்டுகள் காலிக்கோ துணி |
| ஏப்ரல் 24 | கரூர் மோகனிடமிருந்து ரொக்கத்திற்கு வாங்கியது |
| | சேலைகள் மதிப்பு ₹ 25,000 |
| | சட்டைத்துணி மதிப்பு ₹ 7,000 |

(அல்லது)



www.Padasalai.Net

www.Padasalai.Net  www.Trb Tnpsc.Com



b) பின்வரும் நடவடிக்கைகளைக் குறிப்பேட்டில் பதிந்து பேரேட்டில் எடுத்தெழுதவும்.

| 2017 | | ₹ |
|---|---|---|
| அக். 1 | தர்மா ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது | 70,000 |
| 6 | கணேசனிடமிருந்து பெற்ற ரொக்கம் | 10,000 |
| 10 | வாடகை செலுத்தியது | 3,000 |
| 20 | ஆனந்திடமிருந்து பெற்ற கழிவு | 5,000 |

45) a) ரொக்க ஏட்டின் வங்கிப் பத்திக்கும் வங்கி அறிக்கைக்கும் இடையேயான வேறுபாடுகளை தருக. (ஏதேனும் 5)

**(அல்லது)**

b) பின்வரும் விவரங்களை கணக்கியல் சமன்பாட்டின்படி பதிவு செய்க.

(i) ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ₹ 80,000

(ii) இரமேஷிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது ₹ 10,000

(iii) ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது ₹ 6,000

(iv) கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் ₹ 8,000

(v) ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது ₹ 2,000

(vi) வாடகை ரொக்கமாக செலுத்தப்பட்டது ₹ 500

46) a) கணக்கியல் தகவல்களில் பின்வரும் பயனீட்டாளர்கள் ஏன் ஆர்வமாக உள்ளனர்?

(a) முதலீட்டாளர்கள் (b) அரசு

**(அல்லது)**

b) பின்வரும் விவரங்களிலிருந்து ஆனந்த் என்பவரின் கணக்கைத் தயாரிக்கவும்.

| 2017 | | ₹ |
|---|---|---|
| மார்ச் 1 | ஆனந்த் கணக்கின் வரவு இருப்பு | 4,000 |
| 15 | ஆனந்துக்கு ரொக்கம் செலுத்தியது | 2,000 |
| 18 | ஆனந்திடமிருந்து கடனாகக் கொள்முதல் செய்தது | 8,000 |
| 20 | ஆனந்துக்கு ரொக்கம் செலுத்தியது | 3,960 |
| | அவர் அளித்த தள்ளுபடி | 40 |
| 25 | ஆனந்திடமிருந்து கடனுக்கு கொள்முதல் செய்தது | 5,000 |

47) a) பின்வரும் தகவல்களிலிருந்து முன்பண மீட்பு முறையில் பாகுபடுத்தப்பட்ட சில்லறை ரொக்க ஏட்டைத் தயாரிக்கவும்.

| 2017 | | ₹ |
|---|---|---|
| ஜன 1 | சில்லறைச் செலவிற்காக ரொக்கம் பெற்றது | 500 |
| ஜன 2 | பயணச் செலவுக்கு கொடுத்தது | 5 |
| ஜன 3 | வண்டிக் கட்டணம் கொடுத்தது | 12 |
| ஜன 4 | தபால் செலவு செய்தது | 15 |
| ஜன 5 | தற்காலிக வேலையாட்களுக்கு கூலி கொடுத்து | 66 |
| ஜன 6 | எழுது பொருள் வாங்கியது | 134 |
| ஜன 7 | போக்குவரத்துச் செலவுக்கு கொடுத்தது | 18 |
| ஜன 8 | பழுதுபார்ப்புச் செலவு செய்தது | 65 |
| ஜன 9 | பேருந்துக் கட்டணம் செலுத்தியது | 11 |
| ஜன 10 | வண்டிக் கட்டணம் கொடுத்தது | 24 |

**(அல்லது)**

b) பின்வரும் நடவடிக்கைகளை ஜவுளி வியாபாரம் செய்யும் மகேஷின் உள்திருப்ப ஏட்டில் பதிவு செய்க மற்றும் பேரேட்டுக் கணக்குகளை பதிவு செய்க.

| 2017 | |
|---|---|
| ஏப்ரல் 6 | தரம் குறைவு என சங்கர் ஒரு சட்டை ₹ 150 வீதம் 30 சட்டைகளை திருப்பி அனுப்பினார் |
| ஏப்ரல் 8 | ஆணைப்படி இல்லாததால் அமர் தையலகம் ஒரு பனியன் ₹ 100 வீதம் 10 பனியன்களை திருப்பி அனுப்பியது |
| ஏப்ரல் 21 | ஆணையின்படி இல்லையென பிரேமா துணியகம், ஒன்று ₹ 200 வீதம், 12 சட்டைகளை திருப்பி அனுப்பியது |

----------

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com